செய்தி வெளியீடு
பெருநகர சென்னை மாநகராட்சி

செ.வெ.எண்.18 6 நாள் : 20.11.2018

**பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணப் பொருட்கள் அடங்கிய 7 வாகனங்களை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் அனுப்பி வைத்தார்கள்.**

தமிழகத்தில் கஜா புயலால் தஞ்சாவூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, திருவாரூர் மற்றும் சிவகங்கை ஆகிய கடலோர மாவட்டங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாயின. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, புயல் பாதிப்படைந்த பகுதிகளில் நிவாரணப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு பால் பவுடர், அரிசி, ரொட்டிகள், தண்ணீர் பாட்டில்கள், மெழுகுவர்த்திகள், போர்வைகள் உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் அடங்கிய 7 வாகனங்களை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் 19.11.2018 அன்று கொடிசைத்து அனுப்பி வைத்தார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் 16,975 மெழுகுவர்த்திகள், 12,874 பிஸ்கெட் பாக்கெட்டுகள், 11,017 தண்ணீர் பாட்டில்கள், 6,160 தீப்பெட்டிகள், 4,230 நைட்டிகள், 3,600 லுங்கிகள், 3,250 சானிட்டரி நாப்கின்கள், 3,175 போர்வைகள், 3,000 ரொட்டி பாக்கெட்டுகள், 2,085 பால் பவுடர் பாக்கெட்டுகள், 2,020 பற்பசைகள், 1,950 டூத் பிரஷ்கள், 1,950 துண்டுகள், 450 குளியல் சோப்புகள் மற்றும் 125 கிலோ அரிசி போன்ற நிவாரணப் பொருட்கள் புயலால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில், முதன்மை தலைமைப் பொறியாளர் திரு.எம்.புகழேந்தி, மேற்பார்வை பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்
பெருநகர சென்னை மாநகராட்சி